



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| வெள்ளிக்கிழமை ஷஃபான் பிறை 6 ஹிஜ்ரி 1437<br>Friday of Sha'ban 6th Hijri 1437<br>13th May 2016 |

| | |
|---|---|
| தலைப்பு: | **அல்லாஹ் தஆலாவை திக்ர் செய்தல்!** |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | அல்லாஹ் தஆலாவை திக்ர் செய்தல்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். தன்னுடைய அடியார்கள் தன்னை திக்ர் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறான். திக்ர் செய்பவர்களுக்கு கிருபை செய்வதாக வாக்குறுதி தருகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(65:10)

فَاتَّقُوا اللَّهَ يَا أُوْلِي الْأَلْبَابِ الَّذِينَ آمَنُوا قَدْ أَنزَلَ اللَّهُ إِلَيْكُمْ ذِكْراً

"ஆகவே, நம்பிக்கை கொண்ட அறிவாளிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு(த் திருக்குர்ஆன் என்னும்) நல்லுபதேசத்தை இறக்கி வைத்திருக்கின்றான்"

**முஸ்லிம்களே**! நாம் ஷஃபான் மாதத்தில் இருக்கிறோம். இது மிகவும் சங்கை நிறைந்த மாதம். இந்த மாதத்தில் செய்யப்படும் நற்செயல்கள் அல்லாஹ் தஆலாவிடம் ஏற்றுக் கொள்ளப்படும். புனித ரமளான் மாதம் முழுமையாக நமக்கு கிடைக்க இறைவனிடம் துஆச் செய்ய வேண்டும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ்வை திக்ர் செய்து வருவது அமல்களில் மிகவும் சிறந்த மற்றும் தூய்மையான அமலாகும்.

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:



www.sunnathwaljamath.com

لأَنْ أَقُولَ سُبْحَانَ اللَّهِ، وَالْحَمْدُ لِلَّهِ، وَلاَ إِلَهَ إِلاَّ اللَّهُ، وَاللَّهُ أَكْبَرُ، أَحَبُّ إِلَيَّ مِمَّا طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ

"சுப்ஹானல்லாஹி, வல்ஹம்து லில்லாஹி வ லாயிலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர்" (அல்லாஹ் தூயவன்; அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அல்லாஹ் மிகவும் பெரியவன்) என்று நான் கூறுவதானது, சூரியன் எதன் மீது உதிக்கிறதோ அ(ந்த உலகத்)தைவிட எனக்கு மிகவும் பிரியமானதாகும்" (2695 : مسلم)

இதனால்தான் தன்னை திக்ர் செய்ய வேண்டும் என்று தன்னுடைய நபிமார்களுக்கு அல்லாஹ் தஆலா கட்டளையிட்டுள்ளான். நபி ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறைவன் பின்வருமாறு கூறியுள்ளான்: (3:41)

وَاذْكُرْ رَبَّكَ كَثِيرًا وَسَبِّحْ بِالْعَشِيِّ وَالإِبْكَارِ

"நீங்கள் உங்கள் இறைவனை அதிகமாக நினைத்துக் கொண்டும், காலையிலும் மாலையிலும் அவனைத் துதிசெய்து கொண்டும் இருங்கள்"

தன்னுடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்வருமாறு இறைவன் கூறியுள்ளான்: (76:25)

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ بُكْرَةً وَأَصِيلاً

"காலையிலும் மாலையிலும் உங்களது இறைவனின் திருநாமத்தை(க் கூறி) நினைவு கூறுங்கள்"

பரிசுத்த நாயனாகிய அல்லாஹ்வை நாம் அதிகமாக திக்ர் செய்ய வேண்டும் என்று அவன் நமக்கு உத்தரவிடுகிறான்: (33:41-42)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا* وَسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلاً

"நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமாக நினைவு கூறுங்கள். காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்து வாருங்கள்"

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்: குறிப்பிட்ட அளவில் நிர்ணயம் செய்தே எந்த ஒரு கட்டாய கடமையையும் அல்லாஹ் தஆலா கடமையாக்கியுள்ளான். பிறகு அந்த கட்டாய கடமையை அடியார்களால் நிறைவேற்ற முடியாத சூழலில் சலுகை மற்றும் விதிவிலக்கும் தருகிறான். ஆனால் ***அல்லாஹ்வை திக்ர் செய்தல்*** என்கிற கடமைக்கு எந்த நிர்ணயமும் இல்லை. எக்காரணத்தைக் கொண்டும் அதனை விடுவதற்கும் அனுமதியில்லை. எனவே எல்லா நேரத்திலும் எச்சூழ்நிலையிலும் திக்ர் செய்ய வேண்டும். இதனைப் பற்றி பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (4:103)

فَاذْكُرُوا اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَى جُنُوبِكُمْ

"(நம்பிக்கையாளர்களே! இவ்வாறு) உங்கள் நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும் அல்லாஹ்வின் பெயரைக் கூறி "திக்ரு" செய்துகொண்டே இருங்கள்.

அதாவது அல்லும் பகலும், கடலில் செல்லும்போது, நிலத்தில் இருக்கும்போதும், பயணத்தில் இருக்கும்போதும், ஒரே இடத்தில் தங்கி இருக்கும்போதும், செல்வ செழிப்போடு இருக்கும்போதும், வறுமையில் இருக்கும்போதும், ஆரோக்கியமாக இருக்கும்போதும், நோய்வாய்ப்பட்டிருக்கும் போதும், கமுக்கமாகவும், பகிரங்கமாகவும், இப்படி எல்லா நிலையிலும் அவனை திக்ர் செய்ய வேண்டும். (182/11 تفسير ابن كثير)

**திக்ர் செய்யக்கூடியவர்களே**! இறைவனை அதிகமாக திக்ர் செய்பவர்கள் நிச்சயம் வெற்றிப் பெற்றவர்கள்தான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

سَبَقَ الْمُفَرِّدُونَ قَالُوا: وَمَا الْمُفَرِّدُونَ يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ:الذَّاكِرُونَ اللَّهَ كَثِيرًا وَالذَّاكِرَاتُ

"தனித்துவிட்டவர்கள் வெற்றி பெற்றனர்" என்று சொன்னார்கள். மக்கள், "தனித்துவிட்டவர்கள் என்றால் யார், அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூறும் ஆண்களும் நினைவுகூறும் பெண்களும் ஆவர்" என்று பதிலளித்தார்கள். (6984 : مسلم)

காரணம் திக்ர் எனும் அமல் வானத்தை நோக்கி உயர்த்தப்படுகிறது. பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (35:10)

إِلَيْهِ يَصْعَدُ الْكَلِمُ الطَّيِّبُ وَالْعَمَلُ الصَّالِحُ يَرْفَعُهُ

"(கலிமா தையிப், ஸலவாத்து போன்ற) நல்ல வாக்கியங்கள் அவன் அளவில் செல்கின்றன. நல்ல காரியங்களை அவனே உயர்த்துகின்றான்"

ஓர் அடியார் செய்த திக்ர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்ட பட்டோலை இறைவனிடம் எடுத்துச் செல்லப்படும். (**الْكَلِمُ الطَّيِّبُ**)என்றால் "அல்ஹம்துலில்லாஹ்" என்கிற சொல்லும், இறைவனை புகழ்ந்து பேசுகிற சொல்லுமாகும். மேலும் அல்லாஹ்வுடைய திக்ர் மற்றும் அதனைப் போன்ற வாக்கியங்கள் அனைத்தும் இதில் அடங்கும். ((329/14) : تفسير القرطبي)

இறைவனுடைய திக்ர்கள் அடங்கிய வார்த்தைகள் அனைத்தும் விண்ணை நோக்கி உயர்த்தப்படும். அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்படும். அந்த சமயத்தில் இத்தகைய திக்ர்களை செய்த அடியாரைப் பற்றி மிக உயர்வாகவும், சிறப்பாகவும் பேசப்படும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الَّذِينَ يَذْكُرُونَ مِنْ جَلاَلِ اللَّهِ مِنْ تَسْبِيحِهِ وَتَحْمِيدِهِ وَتَكْبِيرِهِ وَتَهْلِيلِهِ يَتَعَاطَفْنَ -أَيْ يَطُفْنَ- حَوْلَ الْعَرْشِ، لَهُنَّ دَوِيٌّ كَدَوِيِّ النَّحْلِ، يُذَكِّرْنَ بِصَاحِبِهِنَّ، أَلاَ يُحِبُّ أَحَدُكُمْ أَنْ لاَ يَزَالَ لَهُ عِنْدَ اللَّهِ شَيْءٌ يُذَكِّرُ بِهِ

"அல்லாஹ்வுடைய திக்ரை செய்பவர்கள் அதாவது (அவர்கள் சொல்லும்) ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர், லா இலாஹ இல்லல்லாஹு போன்ற வார்த்தைகள் அர்ஷை சுற்றி வந்து கொண்டிருக்கும். தேனீக்கள் போன்று ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கும். இந்த வார்த்தைகளை சொன்ன அடியாரை அவைகள் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கும். அல்லாஹ்விடத்தில் தன்னை (மட்டுமே) தொடர்ந்து நினைவு கூறிக்கொண்டே இருக்கும் ஒன்றை ஏற்படுத்தி வைப்பதில் உங்களில் எவருக்கும் விருப்பம் இருக்க வேண்டாமா?" (ابن ماجه : 3809 ، وأحمد : 18859 واللفظ له)

ஒரு மனிதன் பேச துவங்கும் போது இறைவனின் திக்ரை சொல்லும்போது அந்த அமல் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படுகிறது. அதற்கு இறைவனும் பதில் கூறுகிறான். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிக விரிவாக எடுத்துக் கூறுகிறார்கள்.

யாரேனும், "லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். (வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே மேலும் அல்லாஹ் மிகப் பெரியவன்)" என்று கூறினால் கண்டிப்பாக அவர் தன்னுடைய இறைவனை மேய்ப்ப்பித்து விட்டார். இப்படி ஓர் அடியான் கூறிய பிறகு இறைவன், "லா இலாஹ இல்லா அன வ அன அக்பர்" என்று கூறுவான். (இதன் பொருள்: வணக்கத்திற்கு உரியவன் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. மேலும் நான் மிகப் பெரியவன்)

மேலும் ஓர் அடியார், "லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு" என்று கூறினால் அதற்கு அல்லாஹ் இப்படி கூறுகிறான், "லா இலாஹ இல்லா அன வ அன வஹ்தீ" (இதன் பொருள்: வணக்கத்திற்கு உரியவன் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. மேலும் நான் தனித்தவன்)

மேலும் ஓர் அடியார், "லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு" என்று கூறினால் அதற்கு அல்லாஹ், "லா இலாஹ இல்லா அன வ அன வஹ்தீ லா ஷரீக லீ" என்று கூறுவான். (இதன் பொருள்: வணக்கத்திற்கு உரியவன் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. மேலும் நான் தனித்தவன், எனக்கு எந்த இணையும் இல்லை)

மேலும் ஓர் அடியார், "லா இலாஹ இல்லல்லாஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து" என்று கூறினால் அதற்கு அல்லாஹ், "லா இலாஹ இல்லா அன லியல் முல்கு வலியல் ஹம்து" என்று கூறுவான். (இதன் பொருள்: வணக்கத்திற்கு உரியவன் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. மேலும் ஆட்சி அதிகாரங்கள் எனக்கே உரியவை, புகழ் அனைத்தும் எனக்கே உரியவை)

மேலும் ஓர் அடியார், "லா இலாஹ இல்லல்லாஹு வலா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்" என்று கூறினால் அதற்கு அல்லாஹ், "லா இலாஹ இல்லா அன வலா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பீ" என்று கூறுவான். (இதன் பொருள்: வணக்கத்திற்கு உரியவன்

என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. மேலும் எந்த அசைவும் ஆற்றலும் என்னைக் கொண்டு மட்டுமே நடைபெறும்)

மேலும், "ஓர் அடியார் நோய்வாய்ப் பட்டிருக்கும் போது (மேலே குறிப்பிடப்பட்டுள்ள) இந்த திக்ர்களை ஓதிவருகிறார். பிறகு இறந்தும் விடுகிறார். இவரை நரக நெருப்பு தீண்டாது(உணவாக உட்கொள்ளாது)" என்று இறைவன் கூறுவதாக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (3794 : وابن ماجه ، 3430 : الترمذي)

வெற்றி பெறும் பாக்கியம் உள்ளவர்களே, சிறப்புகளை பெறுபவர்களே, நாம் திக்ர் செய்வது மிகப்பெரிய பாக்கியம் உள்ள நற்செயலாகும். மேன்மையும் கண்ணியமும் நிறைந்த அல்லாஹ் திக்ர் செய்து நாம் கூறும் வார்த்தைகளை மெய்ப்பிக்கிறான். எனவே தொடர்ந்து திக்ர் செய்பவர்களுக்கு நற்சோபனம் உண்டு.

**திக்ர் செய்பவர்களே**! அல்லாஹ் தஆலா செய்த மாபெரும் ஒரு கருணை, இந்த திக்ரை மிகவும் எளிமைப்படுத்தி வைத்துள்ளான். நாவால் மொழிவதற்கு மிகவும் இலகுவாக இருக்கிறது. நமக்கு எந்த அளவிற்கு முடியும் அந்த அளவிற்கு அவனை நாம் திக்ர் செய்ய வேண்டும் என்று நமக்கு கட்டளையிடுகிறான். இரவு பகல் என்று நமக்கு எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் திக்ர் செய்தால் போதுமென்று மிக சுலபமாக வழி காட்டுகிறான்.

வெவ்வேறு சூழ்நிலைகள், இடங்கள், நேரங்கள், பொழுதுகள் என்று குறிப்பிட்ட சில பிரத்தியேகமான திக்ர்களை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அந்த நேரங்களில் ஓத வேண்டிய திக்ர்களை ஓதிவந்தால் எண்ணற்ற பல நற்பலன்களை நாம் அனுபவிக்க முடியும்.

ஒருவன் தனது வீட்டிற்குள் நுழையும் போது அல்லாஹ்வை திக்ர் செய்ய வேண்டும். அப்படி செய்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு உயர்தரமான சுபிட்சமான வாழ்வு அமையும். மிகவும் நிம்மதியான அமைதியான சூழல் நிலவும். காரணம் ஒரு வீட்டிற்குள் குழப்பத்தை உருவாக்கி சண்டை சச்சரவுகளை ஏற்படுத்த வழி கெட்ட ஷைத்தான் திட்டம் தீட்டி மும்முரமாக வேலை செய்கிறான்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِذَا دَخَلَ الرَّجُلُ بَيْتَهُ فَذَكَرَ اللَّهَ عِنْدَ دُخُولِهِ وَعِنْدَ طَعَامِهِ، قَالَ الشَّيْطَانُ: لاَ مَبِيتَ لَكُمْ وَلاَ عَشَاءَ. وَإِذَا دَخَلَ فَلَمْ يَذْكُرِ اللَّهَ عِنْدَ دُخُولِهِ قَالَ الشَّيْطَانُ: أَدْرَكْتُمُ الْمَبِيتَ. وَإِذَا لَمْ يَذْكُرِ اللَّهَ عِنْدَ طَعَامِهِ قَالَ: أَدْرَكْتُمُ الْمَبِيتَ وَالْعَشَاءَ

"ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும்போதும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை; உண்ண உணவுமில்லை" என்று கூறுகிறான். ஒருவர் இல்லத்திற்குள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூறாவிட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடம் கிடைத்துவிட்டது" என்று சொல்கிறான்.

அவர் உணவு உண்ணும்போது அல்லாஹ்வின் பெயர் கூறாவிட்டால் ஷைத்தான் "இன்றைய இரவில் நீங்கள் தங்கும் இடத்தையும் உணவையும் அடைந்துகொண்டீர்கள்" என்று சொல்கிறான்" (5381 : مسلم)

மேலும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு மிகவும் அழுத்தமாக கூறுகிறார்கள்:

مَثَلُ الْبَيْتِ الَّذِي يُذْكَرُ اللَّهُ فِيهِ وَالْبَيْتِ الَّذِي لاَ يُذْكَرُ اللَّهُ فِيهِ مَثَلُ الْحَيِّ وَالْمَيِّتِ

"அல்லாஹ் நினைவுகூறப்பட்டுப் போற்றப்படும் இல்லத்தின் நிலை உயிருள்ளவர்களின் நிலைக்கும், அல்லாஹ் நினைவுகூறப்பட்டுப் போற்றப்படாத இல்லத்தின் நிலை உயிரற்றவனின் நிலைக்கும் ஒத்திருக்கிறது" (779 : مسلم)

அதேசமயம் ஒருவன் தன் வீட்டை விட்டு வெளியே சென்றாலும் இறைவனை திக்ர் செய்ய வேண்டும். அப்போதுதான் அவன் வெளியே சென்ற காரியம் வெற்றிகரமாக அமையும், அவனுடைய நோக்கம் நிறைவேறும், எதிர்பாராத ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும், குழப்பமான நிலையில் அல்லாஹ் வலி காட்டுவான்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِذَا خَرَجَ الرَّجُلُ مِنْ بَيْتِهِ فَقَالَ: بِسْمِ اللَّهِ تَوَكَّلْتُ عَلَى اللَّهِ، لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللَّهِ. يُقَالُ حِينَئِذٍ: هُدِيتَ وَكُفِيتَ وَوُقِيتَ، فَتَتَنَحَّى لَهُ الشَّيَاطِينُ، فَيَقُولُ لَهُ شَيْطَانٌ آخَرُ: كَيْفَ لَكَ بِرَجُلٍ قَدْ هُدِيَ وَكُفِيَ وَوُقِيَ

"ஒரு மனிதன் தன்னுடைய வீட்டை விட்டு வெளியே செல்லும்போது, "பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி, லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி (இதன் பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயரால் வெளியே செல்கிறேன், அல்லாஹ்விடமே எனது பொறுப்பை ஒப்படைக்கிறேன், எந்த அசைவும் ஆற்றலும் அவனைக் கொண்டு மட்டுமே நடைபெறும்) என்று திக்ர் செய்து செல்ல வேண்டும். அப்படி அவன் செய்யும் போது, "உனக்கு நேரான பாதை அமைந்துவிட்டது, உனக்கு போதுமானவை அமைந்துவிட்டது, உனக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டுவிட்டது" என்று(வானவர்கள் மூலம்) சொல்லப்படும். அவனை விட்டு ஷைத்தான்கள் விரண்டு ஓடி விடும். அப்போது வேறொரு ஷைத்தான் (இந்த ஷைத்தான்களை பார்த்து), "நேர்வழி காட்டப்பட்ட, போதுமான அளவு கொடுக்கப்பட்ட, பாதுகாப்பு கொடுக்கப்பட்ட ஒரு மனிதரை எப்படி உங்களால் தீங்கு செய்துவிட முடியும்?" என்று கூறும். (أبو داود : 5097 ، الترمذي : 3754)

இப்படித்தான் ஒருவர் இரவில் தூங்கச் செல்லும்போதும் மறக்காது இறைவனை திக்ர் செய்துவிட்டு படுக்க வேண்டும். இப்படி செய்வதால் காலையில் மிகவும் நிம்மதியாக துயில் எழலாம். இரவு முழுவதும் இறைவனுடைய பாதுகாப்பு கிடைக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:



www.sunnathwaljamath.com

إِذَا أَوَيْتَ إِلَى فِرَاشِكَ فَاقْرَأْ آيَةَ الْكُرْسِيِّ، لَنْ يَزَالَ مَعَكَ مِنَ اللَّهِ حَافِظٌ، وَلاَ يَقْرَبُكَ شَيْطَانٌ حَتَّى تُصْبِحَ

"நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸீயை ஓதுங்கள். (அவ்வாறு ஓதினால்) உங்களுடன் பாதுகாவலர் (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். காலை நேரம் வரும் வரை ஷைத்தான் உங்களை நெருங்க மாட்டான்" (البخاري : 5010)

ஒவ்வொரு வேளை தொழுகை முடிந்த பிறகு ஆயத்துல் குர்ஸீ ஓதிவந்தால் நாளை மறுமையில் நிச்சயம் சுவனதிற்குள் செல்லும் பாக்கியம் கிடைக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَرَأَ آيَةَ الْكُرْسِيِّ فِي دُبُرِ كُلِّ صَلاَةٍ مَكْتُوبَةٍ لَمْ يَمْنَعْهُ مِنْ دُخُولِ الْجَنَّةِ إِلاَّ أَنْ يَمُوتَ

"பர்ளான தொழுகையை தொழுது முடித்தவுடன் ஒருவர் ஆயத் குர்ஸீ ஓதினால், கண்டிப்பாக மரணத்தை தவிர வேறு எதுவும் அவரை சுவனதிற்குள் செல்ல விடாமல் தடுக்க முடியாது" ( النسائي في الكبرى: 8948)

யா அல்லாஹ்! நாங்கள் நிலையாக உன்னை திக்ர் செய்வதற்கு நீ எங்களுக்கு உதவி செய்வாயாக. உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னுடைய சுவனத்தை நாங்கள் அடைவதற்கும் நீங்களுக்கு கிருபை செய்வாயாக!!

**கவனமாக கேளுங்கள்**: அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். தொடர்ந்து அவனுக்கு கீழ்படிந்து நடங்கள். எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வை திக்ர் செய்து கொண்டே இருங்கள். ஒரு மனிதர் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதிகள் எனக்கு அதிகமாக தெரிகிறது. எனவே எனக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொடுங்கள், அதனை நான் விடாமல் தொடர்ந்து கடைபிடிக்கிறேன்?" என்று கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

لاَ يَزَالُ لِسَانُكَ رَطْباً مِنْ ذِكْرِ اللَّهِ

"உன்னுடைய நாவு அல்லாஹ்வை திக்ர் செய்வதின் மூலம் தொடர்ந்து ஈரமாகவே இருக்க வேண்டும்" என்று கூறினார்கள். (الترمذي : 3375 ، وابن ماجه 3793)

காரணம் திக்ர் செய்வதன் மூலம் ஒரு மனிதனின் பாவங்களை சிறுக சிறுக அழிந்துவிடும். மேலும் அவனுடைய வாழ்வு தூய்மையாக அமையும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَالَ: سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ. فِي يَوْمٍ مِائَةَ مَرَّةٍ حُطَّتْ خَطَايَاهُ، وَإِنْ كَانَتْ مِثْلَ زَبَدِ الْبَحْرِ

"ஒருவர் ஒவ்வொரு நாளும் நூறு தடவை, "ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி" (இதன் பொருள்: அல்லாஹ் பரிசுத்தமானவன் மேலும் அவன் தனது புகழைக் கொண்டே இருக்கிறான்) என்று கூறிவருகிறார். இவருடைய பாவங்கள் அழிக்கப்படும். அந்த பாவங்கள் கடல் நுரையளவு அதிகமாக இருந்தாலும் அழிக்கப்படும்" (متفق عليه)

திக்ர் செய்வதன் மூலம் ஒரு மனிதனுக்கு நிம்மதியும், மன ஆறுதலும், மன அமைதியும் கிடைக்கிறது. அவனுடைய உள்ளம் விசாலமடைகிறது. அவனுடைய கவலைகள் விலகுகிறது, சிக்கல்கள் குறைகிறது, அவனுடைய எண்ணமும் சிந்தனையும் மேன்மையடைகிறது. உள்ளத்தில் புதிய தெம்பும் உற்சாகமும் பிறக்கிறது. இதயம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (13:28)

الَّذِينَ آمَنُواْ وَتَطْمَئِنُّ قُلُوبُهُم بِذِكْرِ اللَّهِ أَلاَ بِذِكْرِ اللّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ

"அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் (உண்மையான நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயமாக நிம்மதி அடையும் என்பதை (நபியே! நீங்கள்) அறிந்துகொள்ளுங்கள்"

நாளை மறுமையிலும் வெற்றி பெற்று சுவனத்தில் நுழையும் பாக்கியம் கிடைக்கும். பல்வேறு வகையான கண்ணியமும் கௌரவமும் கிடைக்கும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (33:35)

وَالذَّاكِرِينَ اللَّهَ كَثِيرًا وَالذَّاكِرَاتِ أَعَدَّ اللَّهُ لَهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا

"அல்லாஹ்வுடைய திருப்பெயரை அதிகமாக நினைவுகூறும் ஆண்களும் பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்படுத்தி வைத்திருக்கின்றான்"

ஒவ்வொரு நேரமும் நாம் அல்லாஹ்வை திக்ர் செய்கிறோமா என்பதை நமக்கு நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். முதலில் நம்மை சீர்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். நம்முடைய பிள்ளைகளுக்கும் இந்த பயிற்சியை நாம் கொடுக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு நிலையிலும், சூழலிலும் இறைவனை நாமும் திக்ர் செய்து வந்து நமது பிள்ளைகளும் திக்ர் செய்து வந்தால் நிச்சயம் நாம் இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறோம், அவனுடைய திருப்பொருத்தத்தை பெற்று வாழ்வில் நாம் ஏற்றம் பெறுவோம்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக!

மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).